பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 21 வெள்ளிக்கிழமை (03-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 128

# விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்க இந்திய மத்திய அரசு விரும்பவில்லை!

## தமிழக மாநில அரசுக்குத் தெரிவிப்பு

சென்னை, ஏப்ரல் 3

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடைவிதிப்பதை இந்திய மத்திய அரசு விரும்பவில்லை. இந்த முடிவு மத்திய அரசின் அமைச்சர் ஒருவர் மூலம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு நேரில் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவலை சென்னையிலிருந்து வெளியாகும் "தினகரன்" பத்திரிகை சில தினங்களுக்கு முன்னர் முன்பக்கச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

புதுடில்லி வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்யவேண்டும் என்று காங்கிரஸ் மற்றும் அ. தி. மு. க. எம்.பிக்கள் இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் வற்புறுத்தினர் என்பதும்—

அதற்குப் பதிலளித்த மத்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பிரபாவை நாடு கடத்தும்படி இந்தியா கோரவில்லையாம்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானையும் நாடு கடத்தும் படி இந்தியா திட்டவட்டமான முறையில் கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்:

தமது இந்தியப் பயணம் பற்றி விவரித்த அமைச்சர் விக்கிரமசிங்கா—

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சவானுடன் தாம் நடத்திய பேச்சுகளின் போது, ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக பிரபாகரனும் பொட்டு அம்மானும் இந்தியாவுக்குத் தேவைப்படுகின்றனர் என்ற தகவலே வெளியானதாகச் சொன்னார்.

இது விஷயம் இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சு

[5ஆம் பக்கம் பார்க்க]

## தரை மார்க்கத் தாக்குதலை தவிர்த்து வரும் படைகள்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது இராணுவத்தினர் தரைமார்க்கத் தாக்குதல்களைத் தவிர்த்து வருவதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தமது முகாம்கள் உள்ள பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையில் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்திருப்பதன் காரணமாகவே, இராணுவத்தினர் தரைமார்க்கத் தாக்குதலைத் தவிர்த்து வருவதாகவும் ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதன்காரணமாக விடுதலைப்புலிகளின் முகாம்கள் உள்ள பிரதேசத்தின் மீது ஆயுதப்படையினர் கடுமையான முறையில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி வருவதாகவும் அச் செய்திகள் தெரிவித்தன.

## பிரேமா அரசு பதவி விலக கதிர்காமத்தில் நேர்த்தி!

### ஒரு லட்சம் தேங்காய்கள் உடைக்கப்பட்டன

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான அரசாங்கம் பதவி விலக, இறைவன் அருளை வேண்டி கதிர்காமத்தில் நேற்று 50 ஆயிரத்துக்கு அதிகமான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் பிரார்த்தனை நடத்தினர்.

மாணிக்ககங்கையில் நீராடிய பின்னர், வெள்ளை ஆடை உடுத்தி அவர்கள் பிரார்த்தனை செய்தனர் என்றும்—

முருகப் பெருமானுக்கான நைவேத்தியப் பொருள்களை ஏந்தி அவர்கள் கோவிலினுள் சென்றனர் என்றும்—

கந்தனின் வாயிலில் சுமார் ஒரு லட்சம் தேங்காய் உடைத்து அவர்கள் வழிபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசின் படைகளினால் தமது பிள்ளைகளையும் கணவன்மாரையும் இழந்த தாய்மார்களும், மனைவிமாரும் முருகனைக் குறித்து உருக்கமான துதிப்பாடல்களைப் பாடி வழிபட்டனர் என்றும்—

அவ்வாறு செய்தால் தமது குடும்பத்தினரின் மரணத்துக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவர் என அவர்கள் நம்பிக்கை கொண்டு இருந்தனர் என்றும் பி. பி. ஸி.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் இருபடை அணிகளின் முன்னேறும் முயற்சி முறியடிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 3

திருகோணமலை மாவட்டம் கும்புறுப்பிட்டி, வெருகல் முருகன் கோவில் ஆகிய முகாம்களில் இருந்து காடுகள் ஊடாக முன்னேற முயன்ற இராணுவ அணிகளின் முன்னேற்றம் புலிகளின் கடும் எதிர்ப்பினால் முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் பெரும் எடுப்பில் படையினர் மேற்கொண்ட இந்த முன்னேறும் முயற்சியை முறியடிப்பதற்காக புலிகள் தீவிரமாகச் சமர் புரிந்தனர்.

வெருகல் முருகன் கோவில் முகாமில் இருந்து முன்னேறிய படையணி கடும் இழப்புக்களைச் சந்தித்ததாகவும்—

கடந்த சனி, ஞாயிறு இரு தினங்களிலும் புலிகளின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கந்தன் தண்டிப்பான்! பிரேமா நம்பிக்கை!!

லண்டன், ஏப். 3

''தம்மைக் கண்டனம் செய்து கதிர்காமம் சென்றுள்ளவர்கள் மீது கதிர்காமத்துக் கந்தன் உரிய நடவடிக்கை எடுப்பான். கந்தனே அவர்களைத் தண்டிப்பான். அதனால் தான் நான் அதற்கு அனுமதி வழங்கினேன்.''

— ஜனாதிபதி பிரேமதாஸ இப்படிக் கூறியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

ஜனாதிபதி பிரேமதாஸ தனது அரசியல் நோக்கங்களுக்காக மதத்தைப் பயன்படுத்துகிறார் என எதிர்க்கட்சிகள் அடிக்கடிக் கண்டனம் செய்து வந்துள்ளன. தற்போது அதே அரசியல் தந்திரங்களை தாங்களும் கைக்கொள்வதை எதிர்கட்சிகள் ஒத்துக் கொண்டுள்ளன.

இது பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்ததாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

## அன்னை பூபதி நினைவாக

### கூட்டுறவாளர் நாளை உண்ணாவிரதம், அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை நாளை சனிக்கிழமை குடாநாடு எங்கும் பரவலாக அன்னை பூபதி அஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

கூட்டுறவாளர்கள், கூட்டுறவு ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வார்கள்.

தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நாளை காலை 9 மணி முதல் நண்பகல் 2 மணிவரை உண்ணாவிரதம் நடைபெறும்.

அதன் பின்னர் அஞ்சலிக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குகளை அந்தந்தப் பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பாக இருந்து செய்துள்ளன.

உண்ணாவிரதம் நடைபெறவுள்ள ஆலயங்களின் விவரம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அன்று கொல்லுறவையளுக்கு தெய்வம் நின்டு [illegible]

## 2 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 3

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் கிரனேட் ஒன்று வெடித்ததில் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்தனர்; 12 பொலீஸார் காயமடைந்தனர். விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

அதிகாலைவேளை பொலீஸார் அங்கு அணிவகுப்பு நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது கிரனேட் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-5]

## ★ மட்டக்களப்புப் பகுதியில்

### 2 தாக்குதல் சம்பவங்களில் பல படையினர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 3

மட்டக்களப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய இரு தாக்குதல் சம்பவங்களில் படையினர் பலர் உயிரிழந்தனர்.

கடந்த செவ்வாயன்று காத்தான் குடியில் ரோந்து சென்று கொண்டிருந்த படையினர் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திலும்—

நேற்று முன்தினம் மாலை வந்தாறுமூலையில் இருந்து முறக்கொட்டாஞ் சேனையை நோக்கி ஜீப்பில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரை சித்தாண்டி கூட்டுறவுச் சங்கத்தடியில் வழிமறித்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலிலும் படையினர் பலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் ஊரடங்கு!

கொழும்பு, ஏப் 3

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் இன்று [வெள்ளி] அதிகாலை ஒரு மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் ஞாயிறு 5 ஆம் திகதி காலை 6 மணி வரை நீடிக்கும் என்று கூட்டுப்படைகள் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

[உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்; **பௌதிகவியல்**

அலகு: ஒளியியல்

ஆசிரியர்: திரு. வர்ணம்

திகதி: 05 - 04 - 1992

நேரம்: நண்பகல் 12 . 00 — 1 . 00

இடம்: **யூனிவேர்சல்**

கந்தர்மடம்.

(சி/1818)



பாடம்: தாவரவியல்

அலகு: தாவர உடற்றொழிலியல்

ஆசிரியர்:

★ திரு. ஐங்கரநேசன் ★

திகதி: 05 04-1992

நேரம்: பிற்பகல் 5. 30 — 6. 30

இடம்:

**யூனிவேர்சல்**

கந்தர்மடம்.

[சி-1819]



பாடம்:- விலங்கியல்

அலகுகள்:- 1) தொகுதிகள் [93]
2) பெருளாதார விலங்கியல் [92]

ஆசிரியர்:- திரு. நாகநாதன்

திகதி:- 05—04—92

நேரம்: 1) 1. 30—2. 30 [93]
2) 5. 30—6. 30 [92]

இடம்:- யூனிவேர்சல்

கந்தர்மடம்

(சி/1820)



வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசத்தின்

## அறிவித்தல்

அன்னை பூபதியின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 04-04-1992 சனிக்கிழமை சகல அங்கத்தவ சங்கங்களும் கீழ்வருமாறு செயற்பட்டு உதவவும்.

1 தலைமை அலுவலகங்களைப் பூட்டி, அங்கத்தவர். பணியாளர்கள் உரிய இடங்களில் உண்ணாவிரதத்தில் கலந்து சிறப்பித்தல்.

2. உண்ணாவிரதம் நடைபெறும் இடத்திற்கு அண்மையில் உள்ள கிளைகளில் விற்பனைகளை தடை செய்யவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச.-
சமாசம்,
யாழ்ப்பாணம்.

[சி-1761]



உ

தொண்டமனாறு

## அருள்மிகு செல்வச் சந்நிதி ஆலய கும்பாபிஷேக தின சகஷ்ர சங்காபிஷேகம்

பிரசோற்பதி வருஷம் பங்குனி மாதம் 22 ஆம் திகதி (04-04-1992) சனிக்கிழமை காலை 10 மணி அளவில் சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணியளவில் முருகப் பெருமான் வீதி உலாவும் நடைபெறும். இதன் சார்பாக அடியார் மடத்தில் அன்னதானமும் நடைபெறும்.

அனைவரும் வருக! அவன் அருள் பெறுக!

— வே. முருகேசு சுவாமிகள்

[20331]


# உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 3

மானிப்பாய், சோதி வேம்படி மாரி அம்மன் கோவில் வசந்த நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடைபெறும்

★ ★ ★

வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

★ ★ ★

பரந்தன் 3 ஆம் வாய்க்கால் பன்னைலக்சண்டி பிள்ளையார் கோவில் மஹோற்சவ விழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 13 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

★ ★ ★

தொண்டமனாறு அருள்மிகு செல்வச் சந்நிதி கோவில் சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு முருகப் பெருமான் வீதி உலாவும் அதனைத் தொடர்ந்து அடியார் மடத்தில் அன்னதானமும் இடம் பெறும். [த]

# வெளியீட்டு விழா

" ஸ்ரீ கருட புராண வசனம் " நூல் வெளியீட்டு விழா, மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோவிலில் இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் இன்று காலை 9-30 முதல் நண்பகல வரை தாண்டவர் சமாதிச் சிவபூசை நடைபெறும். அவ்வேளையே " ஸ்ரீ கருட புராண வசனம் " நூலின் வெளியீட்டு விழாவும் இடம் பெறும்.

காலஞ் சென்ற விளாசித் தம்பி ஆறுமுகத்தின் ஞாபகார்த்தமாக ஓமந்தை இந்து மாமன்றம் இந் நூலைப் பிரசுரித்துள்ளது. வெளியீட்டு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ஆத்மஜோதி நா. முத்தையா ஆகியோர் கலந்து கொள்வர். [அ]

## பிரேமா..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

செய்தியாளர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் கூட்டாக நடத்திய பாதயாத்திரையின் முடிவில் இந்தப் பிரார்த்தனை இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


**Personal New Science Centre,**
Elilakam Front Lane,
Jaffna.

**92 A/L**
*Revision and Paper*

Che.- திரு. செல்வா
8 - 30 a. m.

Phy:- திரு. ரவீந்திரநாதன்
7 - 30 a. m.

Zoo:- திரு. ஈஸ்வரதாசன்
9 - 30 a. m.

Bot:-
திரு. பாலசுப்பிரமணியம்
10 - 30 a. m.

Pure:- App:- } திரு குணசிங்கம்

ஆரம்பம்:
05—04—1992
ஞாயிறு [illegible] a. m.
[illegible]


# வாகனங்களைச் செலுத்த சூரியகாந்தி எண்ணெய்!

## இங்கு பயிரிடவும் ஏற்பாடு

வாகனங்களைச் செலுத்தக் கூடிய எண்ணெய் வளங்களைப் பெறுவதற்கு சூரியகாந்தி, நிலக்கடலை போன்றவை யாழ். மாவட்டத்தில் பயிரிடப்படவிருக்கின்றன.

வாகனங்களை இயக்குவதற்குத் தேவையான எண்ணெய் வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், இந்தப் புதிய திட்டத்தை செயற்படுத்த விவசாயப் பகுதி ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

யாழ். மாவட்டத்தில் சூரியகாந்தி, நிலக்கடலை போன்றவற்றை பெரும் நிலப்பரப்பில் செய்கை பண்ணி அவற்றின் விதைகளில் இருந்து எண்ணெய் பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்ப வேலைகளும் நடைபெறுகின்றன. [ஒ-3]


தொழில் நுட்பக் கல்லூரி
இறுதிப் பரீட்சைகள் 1989 / 1990 / 1991

## தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பரீட்சை (N. C. B. S.) உட்பட

மேற்படி பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் யாழ்ப்பாணம், தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும்

1992 - 04 - 07 தமிழ் சுருக்கெழுத்து உயர் / N. C. B S.

1992 - 04 - 08 தமிழ் தட்டெழுத்து உயர் / N. C. B. S.

1992 - 04 - 10 ஆங்கில சுருக்கெழுத்து கீழ் / உயர் தரங்கள்

1992 - 04 - 11 ஆங்கில தட்டெழுத்து உயர்தரம்

மேற் குறிப்பிட்ட பரீட்சைகளுக்குரிய பரீட்சார்த்திகள் அவ்வத் திகதிகளில் காலை 9.00 மணிக்கு முன் சமுகமளிக்கவும்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி-1760]


# மரண அறிவித்தல்கள்

## பரமநாதன் சண்முகலிங்கம்

[இளைப்பாறிய நிதி உதவியாளர் யாழ். கல்வித் திணைக்களம்]

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 70, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான பரமநாதன் சண்முகலிங்கம் 2 - 4 - 92 வியாழக்கிழமை காலமானார்;

அன்னார் தவலட்சுமியின் அன்புக் கணவரும், றோகினி [லண்டன்], தர்சினி [தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்], ஸ்ரீதரன் [ஜேர்மனி], ஸ்ரீசங்கர் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், விஜயகுமாரின் [லண்டன்] அன்பு மாமனாரும், கனகலிங்கம், விஜயலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூபாலசிங்கம் [சேவ்டி டிராவல்ஸ்], சறோஜினி ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ச. தர்ஷினி (மகள்)
70, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரியாம்பிள்ளை தேவதாசன்

மரியாம்பிள்ளை தேவதாசன் 30-3-1992 இல் இத்தியாவில் காலமானார். இவர் கரம்பொன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மரியாம்பிள்ளை, திருமதி மரியாம்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், திரேஸ்வயிலாவின் அன்புக் கணவரும், யோன்சன் [ஜேர்மனி], நியூட்டன் [ஜேர்மனி], அனிஸ்ரன், றோயன், சுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட் சகோதரிகள் யேம்ஸ் [A. C.], சகோதரி அஞ்சலினா [H. F.], திருமதி மலர் சூசைப்பிள்ளை, திருமதி அக்னெஸ் பீற்றர் எட்வேட் [அதிபர், சில்லாலை R. C. School] ஆகியோரின், அன்புச் சகோதரனும், திரு. சூசைப்பிள்ளை (றாஜ் மரினா], திரு. பீற்றர் [ஜேர்மனி], திருமதி அருள்மணி எட்வேட் [ஆசிரியை], திரு. பிறவுண், திரு. அன்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யாழ். ஆயர் வண. இயோகுப்பிள்ளை ஆண்டகையின் பெறாமகனும், அருட் சகோதரி எமிலி அவர்களின் மருமகனும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 31-3-1992 திருச்சியில் நடைபெற்றன

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நாளை [04-04-1992] சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு இரங்கத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. சூசைப்பிள்ளை.
'றாஜ் மரினா'
இல. 28, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(20332)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போதிய மழைவீழ்ச்சி இல்லாததால்

# சிறு தானிய பயிர்ச்செய்கை யாழ். மாவட்டத்தில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

'யாழ். மாவட்டத்தில் போதிய மழை இல்லாத காரணத்தால் சிறுதானிய பயிர்ச் செய்கை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் அளித்த விளக்கம் வருமாறு;

சிறுதானியப் பயிர்ச் செய்கையை அதிக பரப்பளவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், போதிய மழை இல்லாத காரணத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் பாசிப்பயறு ஆயிரத்து 606 ஹெக்டரிலும், கௌப்பி ஆயிரத்து 66 ஹெக்டரிலும், எள்ளு ஆயிரத்து 588 ஹெக்டரிலும், உழுந்து 172 ஹெக்டரிலும், மரவள்ளி 860 ஹெக்டரிலும் பயிரிடப்பட்டன.

ஆனால் இவ்வாண்டில் பாசிப்பயறு 191 ஹெக்டரிலும், கௌப்பி 207 ஹெக்டரிலும், எள்ளு 236 ஹெக்டரிலும், உழுந்து 35 ஹெக்டரிலும், மரவள்ளி 587 ஹெக்டரிலும் மட்டுமே விளைச்சலைத் தந்துள்ளது.

தற்போது சிறுதானிய பயிர்ச் செய்கையை நீர்ப்பாசன அடிப்படையில் மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் புகையிலை, வெங்காயம் அறுவடை செய்த நிலப்பரப்புகளில் சிறுதானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டும்.

சிறுதானியப் பயிர்ச் செய்கை நீர்ப்பாசன முறையில் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

[ஒ-3]

## சர்வதேச நாணய நிதியத்தில் ரஷ்யாவும் அங்கத்துவம்!

வாஷிங்டன், ஏப். 3

சர்வதேச நாணய நிதியத்தின் அங்கத்துவ நாடுகளில் ஒன்றாக ரஷ்யாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் சர்வதேச நிதியத்தின் எட்டாவது பெரிய நாடு என்ற அந்தஸ்தை ரஷ்யா பெறுகிறது.

நிதியத்தின் ஆளுநர் குழுவுக்கும், ரஷ்யப் பிரதிநிதிகளுக்கும் இடையில் வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதன் காரணமாக நிதியத்தின் மூன்று வீத நிதிப் பங்கை ரஷ்யா பெறுவதுடன், வருடத்துக்கு 4 ஆயிரம் மில்லியன் டொலர்களையும் கடனாகப் பெறலாம் என அறிவிக்கப்பட்டது. [ஒ-த]

## 30 தங்கப் பாளங்களை கடத்த முயன்றவர் கைது!

### கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, ஏப். 3

19 லட்சம் ரூபா பெறுமதியான 30 தங்கப் பாளங்களை நாட்டுக்குள் கடத்தி வர முயன்ற ஜப்பானிய பிரஜை ஒருவரை சுங்கத்திணைக்கள உளவுப் பிரிவினர் கடந்த செவ்வாய்க்கிழமைஇரவுகைது செய்தனர்.

இந்தத் தங்கப் பாளங்கள் வீடியோ பற்றறி பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவருக்கு 55 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சந்தேக நபர் அபராதத்தை செலுத்த முடியாதிருந்ததால் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை—

பொலீஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்றுக் காலை 5 லட்சம் ரூபா பெறுமதியான 500 கிராம் ஹெரோயினை நாட்டுக்குள் கடத்தி வர முயன்ற இந்திய பிரஜை ஒருவரையும் கைது செய்தனர்.

உணவு அரைக்கும் இயந்திரம் ஒன்றில் ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. கொழும்பு விமான நிலையத்தில் கடந்த சனிக்கிழமையிலிருந்து கைதான இரண்டாவது இந்தியர் இவராவார்.

(ஒ-த)


Bata பாட்டா

வட பகுதி மக்களின் நலன் கருதி
தற்போது
வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ புத்தாண்டை முன்னிட்டு ★

14% முதல் 25% வரை விஷேட
கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:

பாட்டா மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில் றோட், வவுனியா.

[20324]


## சாட்சியமளிக்க முடியாது என்கிறார் ஜெயலலிதா

சென்னை, ஏப். 3

ராஜீவ் காந்தி கொலை பற்றிய விசாரணையில் தாம் சாட்சியமளிக்க முடியாது என்று முதலமைச்சர் ஜெயலலிதா தமிழ்நாடு சட்டசபையில் தெரிவித்தார்.

தாம் முதலமைச்சராக இல்லாத சமயத்தில் நேரிட்ட ஒரு சம்பவத்திற்கு தம்மால் சாட்சியமளிக்க முடியாது என்று கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் கூறினார்.

(இ-எ)


இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்

கைதடி சைவச் சிறுவர் இல்லம்

இல்லப் பொறுப்பாளர் / உதவி பொறுப்பாளர்

பதவிகள்

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து அவ்வில்லப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு இந்து சமயத்தைச் சேர்ந்த 45 வயதுக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரிமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேதனம் நேரில் பேசிக் கொள்ளப்படும். ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் விரும்பப்படுவர்.

சமையற்காரர்கள்:

மேற்படி நிலையத்தில் பணிபுரிவதற்கு அனுபவம் வாய்ந்த 45 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எல்லா விண்ணப்பங்களும் அனுப்ப வேண்டிய முகவரி;

செயலாளர்,
இந்து சமயப் பேரவை,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி-1813]



விக்னா கல்வி நிறுவனம்

G. A. Q.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி

பொருளியல்
திரு. க. கலாகரன்
பிரித்தானிய வரலாறு
3 மணி
பொருளியல் கொள்கைகள் கோட்பாடுகள்
4-30 மணி

ஆரம்பம்:
03 — 04 — 1992
(இன்று)

[சி-1807]


31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம்: 11 — 09 — 1920



மறைவு: 04 — 03 — 1992

அமரர் சபாபதி சுப்பிரமணியம்

சாற்றும் புகழோடு சற்குருவுமாயிருந்து
போற்றிப் புகழ்தந்து பேணியெமை வளர்த்து
சான்றோன் சபாபதி சுப்பிரமணியமென் றுருரைக்க
நேற்றோடு நீர்சென்றீர் ஐயா! இனி என்று
வருவீரோ!

கடந்த 04-03-1992 அன்று இறையடி எய்திய எமது அன்புக்குரிய குடும்பத் தலைவர் அமரர் திரு. சபாபதி சுப்பிரமணியம் அவர்களின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திக் கிரியைகளும், வீட்டுக் கிருத்தியமும் இன்று [03-04-1992] காலை 9-00 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருவதோடு. அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திப்போமாக!

அன்னாரின் அனைத்துக் கிரியைகளிலும் பங்குகொண்டோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

இங்ஙனம்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''துர்க்கா பவனம்''
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(20336)

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் பங்குனி மாதம் 23 ஆம் நாள் (05 - 04 - 1992) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணி 12 நிமிடம் முதல் 3 மணி 30 நிமிடம் வரையுள்ள சுப முகூர்த்தத்தில்,

எமது புத்திரி
திருநிறை செல்வி
திருஞானசோதி
(யாழ். மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றம்)
அவர்களுக்கும்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
குணேந்திரன்
(சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்)
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய திருவருள் பாலித்துள்ளதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வந்து, ஆசீர்வதித்து ★ சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். ★

திரு. ந. அருளம்பலமும் பாரியாரும்,
(இளைப்பாறிய அதிபர்)
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

திரு. சு. இராசரத்தினமும் பாரியாரும்,
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
இணுவில் கிழக்கு,
இணுவில்.

[20316]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிறிய அளவிலான 32 Gauge தகரத் துண்டுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [4604]

6 ஹோர்ஸ் பவர் இழுவை 3000 R. P. M பெற்றர் இங்கிலன்ட் எஞ்ஜின் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். S. S. R அரிசி ஆலை, 1 ஆம் கட்டை, டச்சு வீதி, சாவகச்சேரி. [20329]

### மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி. [சி-1755]

### தவறிவிட்டது

கனகசபை கந்தையா ஆகிய எனது அடையாள அட்டை இல. 281901860V மணிபேர்ஸுடன் சுன்னாகத்திற்கும் அளவெட்டிக்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் சம்பந்தன் கிளினிக், 574/1, ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (20333)

### வினாத்தாள்கள்

தற்போது நடைபெறுகின்ற G. C. E A/L - 92 விசேட பரீட்சைக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களின் வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி-1815]

### A/L வினாத்தாள்

விலங்கியல், தாவரவியல், பௌதிகவியல், இரசாயனவியல், தூய — பிரயோக கணிதம் முன்மாதிரி வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. Personal New Science Centre, எழிலகம் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1811]

### மாதிரி வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4577)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4578]

### இலவச திருமண சேவை

36 வயது, பூராடம், உள்நாட்டில் கமம், வியாபாரம் செய்பவருக்கும். 34 வயது, புனர்பூசம், Denmark இல் தொழில் புரிபவருக்கும் மணப்பெண்கள் தேவை உள்நாடு, வெளிநாடு விண்ணப்பங்கள் ஏற்கப்படும், திருமணம் இலங்கையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4607)

25 விசாகம், 1 ஆம் பாதம், செவ்வாய் 16, கிரக பாவம் 28, A/L அரச சேவையிலுள்ள மணப்பெண்ணுக்கு கனடா மணமகன் தேவை. 36 பூசம், வெளிநாட்டில் தொழில் பார்ப்பவருக்கு 1963 மே மாதம் 5, 13ஆம் திகதிகளுக்கிடையில் பிறந்த மணமகள் தேவை, திருமணம் இலங்கையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4608)

வயது 36, சதயம், செவ்வாய் 7, U.K இல் பெண்ணுக்கு மணமகனும், ஆண் 32 அச்சுவினி U.K இல் I. C. M. A கணக்காளருக்கு, U.K இல் மணமகளும் தேவை. விண்ணப்பங்கள் ஞாயிறு காலையில் ஏற்கப்படும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4609]

## 15 ஆசிரியர்கள் நியமனம்

மிருசுவில் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு 15 ஆசிரியர்கள் தென்மராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-117)

# தாக்குதல் தொடருமாம்!

கொழும்பு, ஏப். 3

வடபகுதியில் இராணுவ நடவடிக்கை தொடரும் என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று நேற்றைய கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

''வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படுமா?'' என்று செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ''ஹயபார'' இராணுவ நடவடிக்கையில் இன்னும் சில தினங்களில் மாற்றம் ஏற்படும் என்றும்—

இந்த மாற்றம் குறித்து விவரம் தெரிவிக்க அந்த அதிகாரி மறுத்து விட்டார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [ஒ-எ-த]


## ஆதரவற்ற சைவச் சிறுவர்களின் அனுமதி

மேற்படி இல்லத்தில் சேரவிரும்பும் ஆதரவற்ற, முக்கியமாக வன்செயல் காரணமாக தாய், தந்தையை இழந்த சிறுவர், சிறுமியர் (8 — 12 வயதுக்குட்பட்ட) சார்பில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விவரங்களுடன் விண்ணப்பங்கள் பகுதிக் கிராம அலுவலரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு பிரதேச உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு விரைவில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

செயலாளர்,
இந்து சமயப் பேரவை,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி/1814]



## ஈவ்லின் இரத்தினம்- பல்லினப்பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
திருநெல்வேலி.

### மே மாதக் கருத்தரங்குகள்

மே 7 மூளைசாலிகள் வெளியேற்றமும், சமூக பொருளாதார தாக்கங்களும்
—விரிவுரையாளர் S. G. செபஸ்தியாம்பிள்ளை

மே 14 தமிழர் பண்பாட்டின் மீள் தரிசனம்
பேராசிரியர்: கா. சிவத்தம்பி

மே 21 ஆசிய இறையியலின் நவீன - போக்குகள்: வண. பிதா
A. J. V. சந்திரகாந்தன்

கருத்தரங்குகள் பி. ப. 3-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இயக்குனர்,
ஈ. இ. ப. பு. ஆ. நி.

[சி/1758]


## 31ஆம் நாள் நினைவலைகள்....



### ஞா. தேவசகாயம்

மண்ணில்: 26—05—1920
விண்ணில்: 03—03—1992

அன்பு தந்தையே ஐயா!
காலமெல்லாம் கண்ணின்
மணிபோல்
எம்மைக் காத்தீர்!
உம் நினைவுகள்
கனவாகிப் போனதே! - எம்
நெஞ்சங்கள் குமுறுதையா!
திடீரென எம்மை எல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட
அன்பு ஐயாவே.....
கலங்காதே! திகையாதே!
என்று சொல்லிவிட்டு
பிரிந்தீர்களே.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள்,
மருகர், மருகியர்,
அன்பு பேரன், பேர்த்திமார்கள்,
உறவினர், நண்பர்கள்.

இல. B 7,
தொடர்மாடி, குருநகர்.

## ஓராண்டு நினைவலைகள்....



### செல்வி இ. சரோஜினி மங்கலிக்கா

(சென். சாள்ஸ் பாடசாலை மாணவி)

மண்ணில்: 14—02—1978
விண்ணில்; 13—03—1991

கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம்!
மாட்சிமை மிக்க தொரு
மன்னர் இயேசுவின் பூமியிலே
மழை போல் வந்தவள்
பாவம் நிறைந்த உலகம்
வேண்டாம் என்று எம்மை விட்டு
மின்னல் போல் மறைந்தாயே!
ஆண்டொன்று கடந்தும் உன்
முகம் மறையவில்லை

என்றும் உன் பிரிவால் வாடும்:

அப்பா, அம்மா,
அன்பு அண்ணா, அக்காமார்,
தங்கைமார், அம்மம்மா,
அங்கிள்மார், அன்ரிமார்,
நண்பர்கள்.

[20334]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 18 — 03 — 1912
மறைவு: 04 — 03 — 1992



அரியாலையூர்

### திருமதி கண்மணி அப்பாத்துரை

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் இருந்து, எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எங்கள் அன்புத் தாயின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இலந்தைக் குளம் றோட்,
அரியாலை.

[20305]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆர்வம் இருந்தால்...

கிழக்கில் இரண்டு பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர் அதிரடித் தாக்குதல் நடத்தியிருப்பது பாதுகாப்பு வட்டாரங்களைத் துணுக்குறச் செய்துள்ளது. அவதானிகளோ பெரும் வியப்பும், ஆச்சரியமும் அடைந்துள்ளார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் கிழக்கை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டோம். வடக்கிலும் குறிப்பிடத்தக்க அளவு பிரதேசம் எங்கள் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது. அங்கும் முழுப் பிரதேசத்தையும் விரைவில் பிடித்து விடுவோம் —

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும், இராணுவ ஜெனரல்களும், படையின் பேச்சாளர்களும் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வெற்றிப்பரணி பாடி வருகிறார்கள்

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. கிழக்கின் சில நகரப் பகுதிகளை மட்டும் இராணுவம் தனது பிடியில் வைத்திருக்கிறது. ஏனைய பிரதேசங்களில் விடுதலைப் புலிகளைக் காண முடிகிறது. மக்களுக்கு அவர்களின் ஆதரவுண்டு — என்று அங்கு சென்று வந்த வெளிநாட்டுச் செய்தியாளர்களும், சில சந்தர்ப்பங்களில் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் கூடத் தெரிவித்திருக்கிறார்கள்,

ஆனால் படையினர் தரப்பில் தாம் கூறுவதை விட்டுக் கொடுக்காமல், சரி என்று ஒப்புவிப்பதற்காக சில சிவில் அதிகாரிகளையும், தமது பக்கத்துக்கு இழுத்து வைத்துக் கொண்டு, கிழக்கில் அமைதி நிலவுகிறது என்று கூறப்படுகிறது

அங்கு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டது. பதற்ற நிலை எதுவும் இல்லை. போராளிகளின் நடவடிக்கைகள் இல்லை ஆகையால் கிழக்கில் ஒரு தேர்தலை நடத்துவதில் எந்தச் சிரமமும் இருக்கமாட்டாது என்று கூடக் கொழும்பில் பத்திரிகையாளர்கள் மாநாடுகள் நடத்தித் தம்பட்டம் அடிக்கப்பட்டது.

ஆனால், கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தமிழ் மக்கள் எப்போதும் மன அச்சத்துடனும், நிம்மதியற்ற நிலையிலும், தமது தொழில்களைச் சுதந்திரமாகச் செய்யமுடியாத சூழ்நிலையிலுமே வாழ்கிறார்கள் என்று சுயேச்சையான அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் பொலிஸ் நிலையங்களைத் தாக்கியதன் மூலம் விடுதலைப் புலிகள் தமது பலத்தை— போராட்டத் திறனை — எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கிழக்கிலும் சரி, வடக்கிலும் சரி தாம் பலமிழக்கவில்லை என்ற செய்தியைக் கூறியுள்ளார்கள்.

அமைதியையோ, சமாதானத்தையோ அல்லது தீர்வைத் தானுமோ, தமிழர்கள் மீது திணித்து அவர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி விட முடியாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும். சமாதானம் அல்லது அமைதி உருவாகிவிட்டதாகப் பொய்மைத் தோற்றத்தைக் காட்டி, தமிழ் மக்களைத் தனது சூழ்ச்சிப் பொறிக்குள் பிடித்துவிடலாம் என்ற தப்புக் கணக்கையும் அழித்துவிட வேண்டும்

அரசுக்குத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் அக்கறையும், ஆர்வமும் இருந்தால் யுத்த நிறுத்தம் செய்து நிபந்தனையில்லாத பேச்சுக்களைத் தொடங்க வேண்டும். இல்லையேல் இப்பிரச்சினை இப்படியே இழுபடும்.

# திருக்கேதீஸ்வரம் அன்றும் இன்றும்: பேரழிவு செய்தது இராணுவம்!

ஈழத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க சிவாலயங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட அதே அளவுக்கு இப்போதும் சேரழிக்கப்பட்டுள்ளது.

அவ்வாலயத்தின் நிலை குறித்து தமிழ் எம். பி ஒருவர் அண்மையில் நாடாளுமன்றத்தில் விவரித்திருந்தார்.

அந்த விவரத்தை இங்கே சுருக்கித் தருகிறோம்.

திருக்கேதீஸ்வரம் ஆலயமும் அதன் யாத்திரிகர் தங்கும் மடங்களும் மற்றும் கட்டடங்களும் இப்பொழுது ஓர் இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இக்கோயில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவுள்ள திருப்பணிச் சபையின் செயலாளர் இராணுவத்தை இக்கோயில் வளவிலிருந்து அப்பாற் செல்ல ஏற்பாடு செய்யுமாறு வேண்டி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு அனுப்பிய வேண்டுகோள் பற்றிச் சுருக்கமாகத் தங்கள் உடனடியான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

1990 ஆகஸ்ட் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் மன்னார், தள்ளாடி இராணுவ முகாமிலிருந்த இராணுவத்தினர் திருக்கேதீஸ்வரம்கோயிலுக்கு விளைவித்த சேதங்கள் பற்றி இச்சபையில் மற்றொரு உறுப்பினர் தெரிவித்திருந்தார்.

அச் சம்பவத்தின் பின்னர் கோயில் பணியாளர்கள் யாவரும், கோயில் அர்ச்சகர்கள் உட்பட அச்சம் காரணமாகக் கோயிலை விட்டுச் செல்லவே 8 மாதங்கள் வரையில் கோயில் முற்றாக மூடப்பட்டிருந்தது. பின்னர் கோயில் திருப்பணிச் சபையினர் கோயிலைத் திறந்து சில பூசைகள் மாத்திரம் நடைபெறச் செய்து வந்த வேளையில் 14-4-1991 அன்று பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கோயிலுக்குச் சென்று அங்கே ஒரு முகாமைத் தாபித்தனர்.

அன்று தொடக்கம் இராணுவத்தினர் அங்கே தங்கியிருப்பதனால் கோயில் இப்பொழுதும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது கோயிலிலிருந்து 3 மைல் தூரத்துள் அர்ச்சகர்கள், வழிபடுவோர் ஆகிய எவருமே செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

அண்மையில் கோயில் அதிகாரிகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் கோயிலுக்குச் சென்று பார்த்தபொழுது கோயில் கதவுகள் உடைக்கப்பட்டிருப்பதையும் அங்கிருந்த மிகப் பெறுமதிவாய்ந்த ஆபரணங்கள், பித்தளை எண்ணெய் விளக்குகள் மற்றும் கோயிலில் வழிபாடு செய்து வந்தவர்களால் கோயிலுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட பல்வேறு வகையான பொருள்கள் யாவும் காணாமற் போயிருந்ததையும், கோயில் முழுவதும் தூய்மை கெடச் செய்யப்பட்டிருந்ததையும் கண்டனர்.

## 2 வருடங்களாக இந்துக்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டுள்ளது

இந்துக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவனை மூலலிங்கமாகக் கொண்ட திருக்கேதீஸ்வரம் இந்நாட்டு இந்துக்களின் மிகப் புராதனமானதும் வரலாற்றுப் பெருமை மிக்கதும் மிகுந்த புனிதத் தன்மை வாய்ந்ததுமான தலமாகும். பன்னெடுங் காலமாகப் புகழ்பெற்றிருந்த இக்கோயில் தென்னிந்தியாவில் சிதம்பரம், இராமேஸ்வரம் ஆகிய கோயில்களுக்கு இணையான புனிதத் தன்மையும், முக்கியத்துவமும் வாய்ந்ததாக விளங்கி வந்திருக்கிறது.

இக்கோயில் இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்த இந்து மக்களின் சர்வதேச மத்திய யாத்திரைத் தலமாகவும் இருந்தது.

இக்கோயிலும் பரிசுத்த நீரைக்கொண்ட இதன் பாலாவித் தீர்த்தமும் முறையே கி. பி. 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து தேவாரம் பாடிய மிகப் புகழ்பெற்ற திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய சைவ நாயன்மார்களால் பெரிதும் போற்றிப் பாடப்பட்டுள்ளன.

### விஜயன் வரு முன்பே இருந்தன

திருக்கேதீஸ்வரம் கோயில் கி. மு 6 ஆம் நூற்றாண்டில் விஜயனும், அவன் தோழர்களும் இலங்கைக்கு வருவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே புகழ்பெற்று விளங்கியதாகச் சொல்லப்படுகிறது. சிறந்த அறிஞரும் வரலாற்றாசிரியருமாக விளங்கிய கலாநிதி போல் ஈ பீரிஸ் இலங்கைக் கோயில்கள் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்.

''விஜயன் இலங்கைக்கு வருவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஈசுவரங்கள் எனப்படும் மதிப்புமிக்க 5 சிவன் கோயில்கள் இலங்கையில் இருந்தன. இந்தச் சிவன் கோயில்கள் இந்திய இந்து மக்கள் யாவராலும் பெரும் மதிப்புடனும், பக்தியுடனும் போற்றப்பட்டுவந்தன. அந்த ஈசுவரங்களாவன: திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகியனவாம்''

விஜயன் மதுரைக்குச் சென்று ஓர் இளவரசியை மணமுடித்து மீண்டும் இலங்கைக்கு வந்திறங்கியவுடன் முதன் முதலில் திருக்கேதீஸ்வரம் கோயிலுக்குச் சென்று வழிபட்டான். அப்பொழுது அவனுடன் மதுரையிலிருந்து வந்த உபதீசன் எனும் பிராமண அர்ச்சகர் அரச தம்பதியரை ஆசீர்வதிக்குமுகமாக இக்கோயிலில் ஒரு விசேட பூசை செய்வித்தார்.

பதினாறாம் நூற்றாண்டில் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தை போர்த்துக்கேயர் இடித்தனர். முற்றாக அழித்தனர்.

அதன் பின்னர்......

1893 இல் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமிருந்த இந்துக்கள், இவ்விரு இடங்களிலுமிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் பேருதவியுடன், ஆதியில் கோயிலிருந்த இடத்தைச் சூழ்ந்துள்ள 40 ஏக்கர் வரையிலான நிலத்தை யாழ்ப்பாண அரசாங்க அதிபராயிருந்த சேர் வில்லியம் துவைனம் நடத்திய ஓர் ஏலத்தில் வாங்கினர்.

கோயிலிருந்த சரியான இடம் 1894 இல் கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பின் 1903, 1922 ஆகிய ஆண்டுகளில் கோயிலை மீளக் கட்டுவதற்காகிய சில வேலைகள் நடைபெற்றன. எனினும் 1948 ஆம் ஆண்டு வரை இக் கோயிலை மீளக் கட்டுவதற்கு வேண்டிய பெரிய வேலைகள் நடைபெறவில்லை.

1948 இல் இந்நாடு சுதந்திரம் அடையவே இக் கோயிலை மீளக் கட்டுவதற்குச் சில தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கோயிலை அது முன்னிருந்த புகழ் பெற்ற நிலையில் தாபிப்பதற்கென '' திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை'' கொழும்பில் 1948 இல் நிறுவப்பட்டது.

அதன் பின், கோயிலை மீளக் கட்டும் திட்டத்தின்படி முதற் கட்ட வேலைகள் முடிந்து விட்டன. இன்னும் 2 ஆம், 3 ஆம் கட்ட வேலைகள் நடைபெற வேண்டியுள்ளன. 2 ஆம் கட்ட வேலைக்கு வேண்டிய கருங்கல்லினாலான சிற்ப வேலைகள் தமிழ்நாடு மாமல்லபுரத்திலுள்ள கட்டடக் கலை, சிற்பக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றன. நாட்டில் இயல்பான நிலை ஏற்பட்டவுடன் இக் கோயில் திருப்பணி வேலைகளைத் தொடங்குவதற்கு கோயில் திருப்பணிச் சபையினர் ஆவலாகவுள்ளனர்.

### வித்தியாசமில்லை

திருக்கேஸ்வரம் கோயிலுக்கு இப்போது ஏற்பட்டுள்ள சேதங்களுக்கும் 19 ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயர் இக் கோயிலுக்கு ஏற்படுத்திய சேதங்களுக்குமிடையில் அதிக வித்தியாசம் இருப்பதாகக் கொள்ள முடியாதிருக்கிறது. இக் கோயிலுக்குச் சென்று வழிபடுவோரின் வழிபாட்டு உரிமை இப்பொழுது சுமார் 2 ஆண்டுகளாக மறுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இக் கோயிலைக் திறந்து பூசை முதலிய சமயக் கிரியைகளைச் செய்வதற்கு வசதியாக இராணுவத்தினரைக் கோயில் வளவிலிருந்து வேறு இடத்திற்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோயில் திருப்பணிச் சபையினர் பாதுகாப்பு அமைச்சரைப் பணிவுடன் வேண்டுகின்றனர். ★

## விடுதலைப் புலிகளுக்கு தடை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகின்றது என்று கூறினார் என்பதும் தெரிந்தவையே.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு புதுடில்லி சென்றிருந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, அங்கு பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசியபோதும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடைவிதிக்கும்படி வற்புறுத்தியதாகத் தெரிகின்றது.

### ராவுக்குக் கடிதம்

தமிழக சட்டசபையிலும் காங்கிரஸ் மற்றும் அ. தி. மு. க. உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினர்.

தமது கோரிக்கையை வலியுறுத்தி பிரதமர் நரசிம்மராவுக்கு ஜெயலலிதா காரசாரமான கடிதம் ஒன்றை அண்மையில் அனுப்பி வைத்திருந்தார்.

இதையடுத்து பிரதமர் நரசிம்மராவ் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ஆகியோர் ஜெயலலிதாவின் கோரிக்கை குறித்து [illegible] கப் பரிசீலித்தனர்.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதில் மத்திய அரசுக்குப் பல சங்கடங்கள் உள்ளன.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சி நடந்து வரும் இந்தச் சமயத்தில் விடுதலைப் புலிகளுக்குத் தடைவிதிப்பதால் புதிய பிரச்சினை உருவாகி, இலங்கையுடன் இந்தியாவுக்கு உள்ள உறவு பாதிக்கப்படும் என்று இந்தியா அஞ்சுகிறது.

அத்துடன் ராஜீவ் கொலை வழக்கு விசாரணை நடந்து வரும் இச்சமயத்தில் விடுதலைப் புலிகளுக்கு தடைவிதிப்பதால் விசாரணைக்கும் இடையூறு ஏற்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

### தற்போது விருப்பமில்லை

இதனால் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடைவிதிப்பதை மத்திய அரசு தற்போதைக்கு விரும்பவில்லை என்றும்—

தமிழக அ. தி. மு. க. அரசுடனான உறவு பாதிக்கப்படுவதை மத்திய அரசு விரும்பாதபோதிலும், தற்சமயம் புலிகளுக்கு தடைவிதிக்கும் கோரிக்கையை ஏற்பதில்லை [illegible] அரசு [illegible] என்றும் தெரிகிறது.

இதனை அடுத்து மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப்பை பிரதமர் நரசிமராவ் அவசரமாக கடந்த மார்ச் மாத நடுப்பகுதியில் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

அவர் விடுதலைப் புலிகளுக்கு தற்போதைக்குத் தடை விதிப்பதில்லை என்ற மத்திய அரசின் நிலையை முதலமைச்சருக்கு நேரில் எடுத்துக் கூறினார் என்றும்—

செல்வி ஜெயலலிதா இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தெரிகின்றது.

### ஜெயலலிதா விடாப்பிடி

விடுதலைப்புலிகளுக்குத் தடை விதித்தே ஆகவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அப்போது விடாப்பிடியாக வற்புறுத்தினார் என்றும் தெரியவருகின்றது.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறி, அதுபற்றிய விரிவான தகவல்களையும் ஜெயலலிதா, இணை அமைச்சரிடம் கொடுத்ததாகத் தெரியவருகின்றது.

கடல் பகுதியில் கடும் கண்காணிப்பு இருந்த போதிலும் ஆயுதங்கள் தொடர்ந்து கடத்தப் பட்டு வருவதாகவும் செல்வி ஜெயலலிதா அப்போது சொன்னார்.

ஜெயலலிதா சந்திப்பின் பின்னர் இணை அமைச்சர் ஜெக்கப் புதுவையில் செய்தியாளரிடம் பேசுகையில்—

''கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதை காரணம் காட்டி எந்த அமைப்பையும் (விடுதலைப் புலி) தடை செய்ய முடியாது'' நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும்போது தான் எந்த அமைப்பையும் தடை செய்ய முடியும்''— என்று கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது

எனவே விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையை பிரதமர் நிராகரித்து விட்டார் என்று கூறப்படுகின்றது

—என்று செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது

(உ-எ)

### பிரபாவை....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி) களினாலும் அந்தந்த நாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களின் அடிப்படையில் பரிசிலனை செய்யப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

[உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேருவில் சிங்களவருக்கு பதுங்குகுழி வாழ்க்கை!

திருகோணமலை, ஏப். 3

திருகோணமலை மாவட்டம் சேருவில சிங்களக் கிராமத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் சிங்கள மக்கள் பதுங்கு குழிகளில் வாழ்கிறார்கள்.

பதுங்கு குழியில் வாழ்க்கை நடத்தும் கலாசாரத்துக்குத் தாம் பழக்கப்பட்டு விட்டதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழ்ப் போராளிகளின் திடீர்த் தாக்குதலுக்கு அஞ்சியே தாம் இப்பதுங்குகுழி வாழ்க்கைக் கலாசாரத்தை மேற்கொண்டிருப்பதாக சேருவில பகுதி சிங்கள விவசாயி எச். ஏ. சோமரத்ன அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

''நாம் தொடர்ந்து 2, 3 நாட்கள் பதுங்கு குழிகளில் வாழவேண்டியுள்ளது. இறப்பு எந்த நேரமும் எமக்கு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே நாம் பதுங்கு குழி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளோம்'' என்றும் சோமரத்ன கூறியுள்ளார்.

இன்னொரு விவசாயி ஆர். குணபால கருத்து வெளியிடுகையில்—

காலை 7 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் எமது பயணங்களை மேற்கொண்டு முடித்துவிட வேண்டியுள்ளது- என்று தெரிவித்திருக்கிறார். [அ-எ]

## பலாலிக்கு அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், ஏப். 3

பலாலி தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் சுக நலன்களைக் கண்டறிவதற்குச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் கோஷ்டி நேற்று சென்றது.

காங்கேசன்துறை செல்லும் வாகன அணியுடன் இவ்வதிகாரிகள் கோஷ்டியும் சென்றது. (அ-3)

# இன்று

தென்மராட்சி, ஏப். 3

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வியாபாரம் நடத்தும் தேநீர்க் கடை உணவு விடுதிகள், பேக்கரிகள் ஆகியவற்றின் உரிமையாளருக்கான சுகாதாரக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவை முன்னிட்டு இன்று அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் உண்ணாவிரதமும் நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

## அரச அதிபருக்கு தொலைபேசி

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். அரச அதிபருக்கு தொலைபேசி வசதி விரைவில் கிடைக்கவிருக்கிறது.

வடக்கு — கிழக்கு புனர்வாழ்வு வேலைகள் பற்றி ஆராய்வதற்காக கொழும்பில் நடந்த கூட்டத்தில் இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டது.

பிரஸ்தாப கூட்டத்தில் கலந்து கொண்ட தொலைத் தொடர்பு திணைக்கள அதிகாரி, கிளிநொச்சியில் உள்ள தொலைத் தொடர்பு சாதனத்தை யாழ். அரச அதிபருக்கு பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் என அறியவந்துள்ளது. (அ 3)

## திருமலையில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கண்ணி வெடிகளில் சிக்கி பல படையினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கும்புறுப்பிட்டி முகாமில் இருந்து முன்னேறிய படையணிகள் அங்கோடை என்னும் இடத்துக்கு அப்பால் நகர முடியாத நிலையில் அங்கேயே தரித்து நிற்பதாகவும் சொல்லப்படுகிறது.

வெருகல் காட்டுப் பகுதிகளில் தற்போது கடும் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

திருகோணமலையில் அண்மையில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது பெரும் தாக்குதல் நடவடிக்கை இது என்றும்—அந்த நடவடிக்கையும் முறியடிக்கப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]

## கூட்டுறவாளர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வருமாறு:-

**வலிகாமம்:**

கைலாசபிள்ளையார் கோவிலடி—நல்லூர், மாத்தனை முருகன் கோவிலடி—கொக்குவில், சிவன் கோவில்—புத்தூர், கதிரமலைசிவன்கோவில் —சுன்னாகம், வழக்கம்பரை அம்மன் கோவிலடி.

**தென்மராட்சி:**

நுணாவில் அம்மன் கோவிலடி- நுணாவில், அந்தோனியார் கோவிலடி — மிருசுவில்.

**வடமராட்சி:**

மூத்த விநாயகர் கோவிலடி— கரணவாய், அம்மன் கோவிலடி- மந்திகை, நாகதம்பிரான் கோவிலடி. [அ]

## முத்தமிழ் விழா நிதி சேர்க்க பல்வேறு கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

எதிர் வரும் ஜூன் மாதமளவில் தமிழீழத்தின் பல பாகங்களிலும் கொண்டாடப்படவுள்ள முத்தமிழ் விழாவிற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடாத்தவுள்ளது. இத்தொடரில் தென்மராட்சிப் பிரிவில் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதன்படி இன்று கைதடி நவில்ட் பாடசாலை மைதானத்திலும், நாளை சாவகச்சேரி மகளிர் கல்லூரி அரங்கிலும், நாளை மறுதினம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் இரவு 7 மணிக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இக்கலை நிகழ்ச்சியின் போது 'இந்த மண் எங்களின் சொந்த மண்' புகழ் சாந்தன் குழுவினர் வழங்கும் 'போர்க்கால ராகங்கள்' இசை நிகழ்ச்சியும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட திரு. பொன். கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகமும் இடம்பெறவிருக்கிறது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி அரங்கில் இடம்பெறவிருக்கும் கலை நிகழ்ச்சியின் போது தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினர் தயாரித்து வழங்கும் ''நாளை மலரும் தமிழீழம்'' நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது. [உ]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 3

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தினால் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்படும் வாராந்தக் கருத்தரங்கு இவ்வாரமும் ஞாயிறு காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் ''எனது கலை இலக்கிய அனுபவங்கள்'' என்ற பொருளில் செம்பியன் செல்வன் கருத்துரையாற்றுவார். [உ]

## ஐ. தே. க. சார்பில் கேகாலையில் ருக்மன் போட்டி?

கொழும்பு, ஏப். 2

கலைக்கப்பட்ட எக்ஸத் லங்கா ஜாதிக கட்சியின் அமைப்பாளரான திரு. ருக்மன் சேனநாயக்கா எதிர் வரும் பொதுத் தேர்தலில் கேகாலை மாவட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராக நிறுத்தப்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அக் கட்சியின் செயலாளராகவிருந்த டாக்டர் காமினி விஜேசேகரா, கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடலாம் என்றும் கூறப்படுகிறது. [ஒ-எ]

## ருக்மன் கட்சியினர் 60 ஆயிரம் பேர் ஐ. தே. கவில்!

கொழும்பு. ஏப். 3

கலைக்கப்பட்ட எக்ஸத் ஜாதிக லங்கா கட்சியின் 60 ஆயிரம் உறுப்பினர்கள் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்,

அக் கட்சியின் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுவது என்று ஐ. தே. க. தலைமைப்பீடம் முடிவு எடுத்துள்ளது. (ஒ-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை வீரபாண்டியன் யூலியன்**
**இம்மானுவேல் தர்மக்கொடி**
**செல்வேந்திரன் குரூஸ்**

பிறப்பு: **1974 - 11 - 27** வீரச்சாவு: **1992 - 03 - 05**

இன்முகத்தவனாய்—பண்பின்
உறைவிடமாய்—பாசத்தின்
சிகரமாய் கண்களால் கதைபேசி
இன்று கட்டைக் காட்டினிலே
காவியம் ஆனாயோ மாவீரன்
ஆனாயோ ஆண்டுகள் பல
சென்றாலும் உன் கனவு
நனவாகும்! மலரும் தமிழீழம்!

இவரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக அர்ச். கொஞ்சேஞ்சி மாத பேராலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருப்பலி பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

இவருடன் களத்தில் மடிந்த சக தோழர்கள் இருவருக்கும் எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாய், சகோதர சகோதரிகள், அத்தான்,
மருமக்கள், மச்சாள். உற்றார்,
உறவினர், நண்பர்கள்,
சகதோழர்கள் மற்றும்
பி. ஜ பர்னான்டோ ஸ்தாபனத்தினர்.

B 2, தொடர்மாடி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
(சி/1763)

## வித்யா தரிசனம்

கோபதாபங்களை மறந்து இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க வித்யா தரிசனம் வேண்டி இன்று (வெள்ளி) மாலை 6. 00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— உமா மங்கை —
திருநெல்வேலி
(சி/1764)

## 2 ஆவது மாத நினைவாஞ்சலி



**அமரர் காசிநாதர் சுப்பிரமணியம்**
(நம்பவெட்டி மணியம்)

உதயத்தில்: **27 - 12 - 1920** இதயத்தில்: **02 - 02 - 1992**

அருமையாய் வளர்த்தீர் காத்தீர்
ஆசைகள் யாவும் தீர்த்தீர்
பெருமையாய் வாழச் செய்தீர்
பெரு வெளிக் கோடிச் சென்றீர்
பெருகிடும் கண்ணீரோடு
பொங்கிடும் துயரில் நின்றே
உருகிடும் நெஞ்சில் என்றும்
உற்றிடும் ஒளியாய் வாழ்வீர்.

மருக்காரம்பளை,
வவுனியா.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்கள்.

[20339]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர் வீதி, 298/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 3 4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org